**தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத் தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை உண்மையாகவும் நியாயமாகவும் காட்டும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய ஆளுகைத் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்றுவழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- நிறுவனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘சிறப்பாகக் திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டினுள் ரூபா20,458,790 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 7 இன் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் 2021 ஆம் ஆண்டின் கொள்வனவுகளாக ரூபா 6,260,000 பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் மற்றும் ரூபா 598,790 பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் ஆகியவற்றை பதிவு செய்தல் உரிய விடயத்திற்கு பொறுப்பான பெண் உத்தியோகத்தரினால் தவறவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அந்த பதிவேட்டினை நாளதுவரையாக்க அறிவுரை வழங்கப்பட்டதுடன், மோட்டார் வாகனங்களுக்கு தனியானதொரு நிலையான சொத்துக்கள் பதிவேடு உள்ளபடியால் குறித்த ரூபா 13,600,000 தொகையானது இந்த நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டுள்ளதாக குறித்த பெண் உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்டது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலை கணிப்பீடு செய்யும் போது, பெறுமானத் தேய்வு, வட்டிப் | முதலீடுகளின் ஊடாக ஈட்டிய வட்டி மற்றும் ஊழியர் கடன் மூலம் ஈட்டிய வட்டி ஆகியவை காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவு மற்றும் செயற்படு மூலதன அசைவுகள் மற்றும் முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் சரியாக சீராக்கம் செய்யப்பட்டிராத காரணத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சல் ரூபா 11,346,381 இனால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கைகளின் கீழ் (Investment in Fund Deposit) காண்பிக்கப்பட்டுள்ளது. முதலீடுகளிலிருந்து ஈட்டிய வட்டி மற்றும் ஊழியர் கடன் மூலம் ஈட்டிய வட்டி மற்றும் முதலீட்டு தொகை தனியாக காண்பிக்கப்படாத போதும் அதில் உள்ளடங்கியுள்ளது. | காசுப்பாய்ச்சல கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தொழில் அமைச்சினால் நிறுவனத்தின் சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் மூலதன மானியங்கள், நிறுவனத்தினால் சொத்துக்களின் கொள்வனவு பணிகளுக்காக பயன்படுத்தப்படும். அவ்வாற தொழில் அமைச்சினால் நிறுவனத்தின் மூலதனச் செலவினங்களுக்காக ரூபா1,124,700 கூட்டுத்தொகையான இரு காசோலைகள் வழங்கப்பட்டிருந்ததுடடன், நிறுவனத்தினால் கணக்கு வைக்கும் போது இந்த மூலதன மானியங்கள் தமது மீண்டெழும் மானியங்களின் மீளளிப்புக்காக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த மூலதன மானியங்கள் திறைசேரியின் மானியங்களாக 2021 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றிலும் எடுக்கப்பட்டிருந்தது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம், பறிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களிலிருந்து உருவாகும் மிகைக் கட்டணங்களை இனங்காணுவதற்காக பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் ஆண்டுக்காக தொழில் அமைச்சின் மூலதனச் செலவினங்களுக்காக ரூபா1,964,880 | கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம் ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், தொழில் அமைச்சின் கணக்குப் பிரிவினால் 2018 ஆம் ஆண்டின் போது எமக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது பட்டியல்களின் மீளளிப்பிற்காக அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அமைச்சின் பெறுவனவுகளாக ஐந்தொகையில் காண்பிக்க வேண்டாம் என்பதாகும். அவ்வாறே, 2018 ஆம் ஆண்டு முதல் நிதியேற்பாட்டினை நிதி அமைச்சினால் வழங்கும் போது Zero Budget இன் கீழ் பணம் செலுத்துவதற்கு அமைச்சிற்கு நிதி அமைச்சினால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன் காரணத்தால் 2019 ஆம் ஆண்டு முதல் காசு அடிப்படையில் மாத்திரம் நிறுவனம் கணக்கு வைத்தலை மேற்கொண்டது. அதன் காரணமாக 2021 ஆம் ஆண்டுக்குரிய நிதியெற்பாடுகள் 2022 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த பெறுமதிகள் 2021 ஆம் ஆண்டின் பெறுறுவனவுகளாக பதிவு செய்யப்படவில்லை.<br><br>மேலும், மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக ஈடுபடுத்தப்பட்டிராததுடன், நிறுவனத்தினால் செலவினம் | ஐந்தொகை திகதிக்கு பின்னரான நிகழ்வுகள் சரியாக நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கூட்டுத்தொகையான இரு காசோலைகள் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2022 சனவரி 04 ஆந் திகதி இந்த இரு காசோலைகளும் தீர்வையாகியுள்ளதாக 2022 சனவரி மாதம் வங்கிக் கூற்றினை பரிசோதித்தி போது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், ஐந்தொகைத் திகதியில் நிலவிய நிலைமைக்கு மேலும் தாக்கம் ஏற்படுத்தும் ஐந்தொகை திகதியின் பின்னரான நிகழ்வுகள் ஐந்தொகைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டு மீளளிப்புக்காக முன்வைக்கப்பட்டு அமைச்சினால் வழங்கப்பட்ட பணம் தவறுதலாக கணக்கு தலைப்பொன்றினை மாற்றுவதன் ஊடாக கணக்குகளுக்கு பிரதியிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2022 ஆம் ஆண்டு நிதியேற்பாடு கிடைக்கும் போது சரியான பணப் பற்றுச்சீட்டுகளை வழங்குமாறு கணக்குப் பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்தது. | |
| (இ) | நிறுவனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கையின் பிரகாரம், அனைத்து சொத்துக்களையும் கொள்வனவு செய்யும் வருடத்தில் பெறுமானத் தேய்விடாது இருப்பதற்கும், விற்பனை செய்யும் ஆண்டில் முழு ஆண்டிற்கும் தேய்விடப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா20,440,900 பெறுமதியானவைக்காக ரூபா2,102,180 தேய்விடப்பட்டிருந்தமையால் ஆண்டின் மீகை ரூபா2,102,180 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கீட்டு குறைபாட்டினை 2022 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்வதன் மூலம் திருத்துவதற்கு குறித்து வைத்துக்கொள்கின்றேன். | நிறுவனத்தின் பெறுமானத் தேய்வுக் கொள்கை சரியாக பின்பற்றப்பட வேண்டும். |
| (ஈ) | நிறுவனத்தின் உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிராததுடன், அதில் அரசின் பங்களிப்பு மற்றும் திரண்ட நிதியம் ஆகியவை ஒரே மீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. கடந்த வருடத்தின் ஆரம்ப மீதிகளுடன் ஒப்பிடும் போது மேற்குறிப்பிட்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள | 2021 ஆம் ஆண்டின் உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்றின் ஆரம்ப மீதியாக ரூபா 202,157,806 ஆக காண்பிக்கப்பட்டது 2020 இன் கணக்குகளில் ஆகும். ஆண்டின் இறுதி மீதி தெளிவாக 2021 இன் ஆரம்ப மீதியான கணக்குகளை பயன்படுத்துவோருக்கு தெளிவாக இனங்காணும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.<br><br>அவ்வாறே, ரூபா 6,133,798 தொகை எந்த விதத்திலும் | உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்க தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதிகளில் ரூபா 6,133,798 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், அந்த வேறுபாட்டுக்கான காரணங்கள் கணக்காய்வில் தெளிவுபடுத்தப்படவில்லை. | அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிராததுடன், அது முன்னை வருட சீராக்கம் ஆகும். அது நிதிக்கூற்றுக்களின் படக்க இலக்கம் 7 இன் 3 ஆம் பந்தியின் கீழ் (Prior Year Adjustment) ஆக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (உ) | நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டுக்கான முதலீட்டு வட்டி ரூபா12,753,403 ஆன போதிலும், அந்த அளவானது ரூபா 9,218,664 ஆக ரூபா 3,534,739 இனால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகையானது அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | முதலீடுகளின் ஊடாக ஈட்டிய வட்டி மற்றும் ஊழியர் கடன் மூலம் ஈட்டியவ ட்டி காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ளது. | ஆண்டுக்குரிய முதலீட்டு வட்டி சரியாக கணிப்பிடப்பட்டுள கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 756 | 2021 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வுச் சபையினால் பொது 47 மாதிரிக்கமைய சமர்ப்பிக்கப்பட்டுள்ள பயன்படுத்த முடியாத 19 வகையான பண்டத் தொகுதிகளுக்குரிய 61 அலகுகள் தொடர்பில் எதிர்வரும் நிதியாண்டில் மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்னர் மதிப்பாய்வுச் சபையின் அவதானிப்புகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | தற்போது, உரிய உபகரணங்களை அரசாங்க நிறுவனத்திற்கு மாற்றுவதற்கும், அதற்கான உள்ளக கணக்காய்வு திணைக்களத்தின் பரிந்துரைகளைப் பெற்ற பின்னர் கௌரவ செயலாளரின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்ட பின்னர் நான் அந்த நடவடிக்கைகளை நிறைவு செய்கின்றேன். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு | பணிக்கொடையைக் கணக்கிடுவதற்கான அடிப்படை அல்லது திரண்ட சம்பளம் அல்லது | எதிர்வரும் ஆண்டுகளில் ஊதியக் கணக்கீட்டில் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவை திரண்ட | பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் படி செலுத்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு | ஊதியத்தில் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு சேர்க்கப்பட வேண்டும் என்றாலும், பணிக்கொடையைக் கணக்கிடும் போது நிறுவனம் வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவைக் கருத்தில் கொள்ளவில்லை. | ஊதியத்துடன் சேர்க்க கணக்காளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தி மற்றும் வழிகாட்டி இலக்கம் 14 | நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கைக்குரிய அறிவுரைகள் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை தொழில் அமைச்சின் அறிவுரையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஈ) | அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2021 இன் 12.1 பிரிவு | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கைகள் 2022 ஏப்ரல் 21 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை தற்போது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (உ) | 2009 இன் 38 ஆம் இலக்க தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவக அதிகாரச்சட்டத்தின் 3(1)(க) உப பிரிவு | தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறை தொடர்பான தேசிய நியமங்களை நிறுவுவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், 2022 ஏப்ரல் 30ஆந் திகதி வரையிலும் இந்த நியமங்கள் நிறுவப்பட்டிருக்கவில்லை. | தேசிய நியமங்களை நிறுவும் அதிகாரம் இலங்கை நியமங்கள் நிறுவகத்திற்கே உள்ளது. அதன் காரணத்தால், அந்த நிறுவனங்களுடன் இணைந்து நியமங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான உதாரணமாக Standard Practice Reparative Protection நியமங்கள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. | அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 25,122,253 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 11,057,350 தொகையாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 14,064,903 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்பாட்டு வருமானம் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.